# இரத்தோட்டை

# ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர

## கும்பாபிஷேக சிறப்புமலர்



**22.03.2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நிறைவுபெற்று
விநாயகர் திருவருள் நாடு முழுவதும் கிடைக்க
கரம் கூப்பி வணங்குகின்றோம்.

**நியாய விலையில் உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவும் மற்றும் அரிசி, மிளகாய், தானிய வகைகளை சுத்தமாக அரைத்துக்கொள்ளவும் நாடவேண்டிய நிறுவனம்**

# P. M. BROTHER'S

&

# RATTOTA GRINDING MILLS

**33, பிரதான வீதி, இரத்தோட்டை**

**தொலைபேசி : 066-55223**

---

# SHANIKA COMMUNICATIOS





**31, பிரதான வீதி, இரத்தோட்டை**

**தொலைபேசி : 066-55463, 55199**

- உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள்
- தெளிவான வீடியோ, ஆடியோ நாடாக்கள்
- பாடசாலை உபகரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

## இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர்



# 22.03.2000

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

## அன்புடன் வரவேற்கின்றேன்



ஓங்காரமூர்த்தியாகிய மூத்த பிள்ளையார், ஸ்ரீ செல்வ விநாயகர் என்னும் திருநாமம் தரித்து மாத்தளைப் பகுதியில் இரத்தோட்டை நகரில், அழகும் வனப்பு மிக்கதுமான திருக்கோயிலில் ஆன்மாக்களுக்கு அருள்மழை பொழிந்து கொண்டு வீற்றிருந்தருளுகின்றார். அற்புதப்பெருக்கால் யாவரையும் ஆற்படுத்தியருளுகின்றார்.


நாஸ்திகம், மதமாற்றம், அமைதியின்மை தலையெடுக்கும் இக்காலத்திலே எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கு ஓர் அழகிய இராஜகோபுரத்தை அமைத்து, மகாகும்பாபிஷேகத்தை நடாத்துகின்ற இந் நன்னாளிலே மனச்சாந்தியும், அருட்கடாட்சமும், சமாதானமும் நிலவும் பொருட்டு எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.

எமது ஆலயத்திலே, நவக்கிரக ஆலயம் ஒன்றை அமைக்கவேண்டும், சித்திரத்தேர் ஒன்றை நிர்மானிக்க வேண்டும், இராஜகோபுரத்தை அமைக்க வேண்டும் என்ற முக்கிய மூன்று பணிகளை முன்வைத்து, எமது திருப்பணியை ஆரம்பித்தோம். ஏற்கனவே இரண்டு பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றி மூன்றாவது பெரும்பணியாகிய இராஜகோபுர திருப்பணியை இனிதே நிறைவேற்றி அதன் மகாகும்பாபிஷேகத்தையும் இன்று நடாத்துவதற்கு ஸ்ரீ செல்வவிநாயகப்பெருமானின் அருட்கடாட்சமும் கிடைக்கப்பெற்றதை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.


இப்பணிகள் யாவும் குறுகிய கால இடைவெளிக்குள் இனிதே நிறைவேற இரத்தோட்டை வாழ் சைவப்பெருமக்களும், இலங்கை வாழ் சைவப்பெருமக்களும் நிதி உதவி, பொருளுதவி அளித்து ஒத்துழைப்பு வழங்கினார்கள். இதற்கு மேலாக நிர்வாக சபையினரதும், திருப்பணிச்சபையினரதும் பூரண ஒத்துழைப்பும், அயரா முயற்சியும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பூரண அனுக்கிரகமும் தான் இப்பணிகள் இனிதே நடைபெற காரணமாக அமைந்தன.

இந்த நிர்வாக சபையின் தலைவன் என்ற முறையில் நான் நன்றியுடனும், பெருமையுடனும் கூறிக்கொள்ளும் ஒரு விடயம் இப்பணிகள் யாவற்றையும் இனிதே நிறைவேற்றுவதற்கு ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமான் எமக்கு ஒரு சந்தர்ப்பத்தையும் அந்தப் பெரும் பாக்கியத்தையும் கொடுத்தான் என்பது தான். ஆகவே இதற்கு உண்டான முழுப்பெருமையும், புகழும் ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமானையே சென்றடைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தான ஸ்ரீ செல்வவிநாயகர்



வசந்த மண்டபத்தில் ஸ்ரீ செல்வவிநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணேசாயநம!

# இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீஜெயந்திநாதக்குருக்களின் ஆசியுரை



இலங்கை திருநாட்டில், மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், இரத்தோட்டை எனும் சிறிய நகரின் மத்தியில் அமைந்த இராஜகோபுரம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றையும் ஒருங்கே கொண்ட ஸ்ரீ செல்வ விநாயக ஆலய இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் 22.03.2000 புதன்கிழமை நடைபெறுகின்றது.

திருக்கோவில்களை ஆகமமுறைப்படி அமைத்து அவற்றில் திருவருட் பிரகாசம் நிறைய செய்யும் விழா "மகா கும்பாபிஷேகம்" ஆகும். முறைப்படி செய்யப்படும் கும்பாபிஷேக விழாவின் மூலம் ஆலயங்களில் மூர்த்திகளின் தெய்வீகம் மிகுதிப்படுத்தப்பட்டு, அருட்சக்தி பொங்கிப் பெருகி பிரவகித்துப் பிரகாசிக்கப்படும். குடமுழுக்கு விழா, கும்பாபிஷேக விழா, பெரும் சாந்தி என்பன ஒரே பொருள் தரும் சொற்களாகும். விதிப்படி ஆவாகனம் செய்யப்பட்ட கும்பத்தை, குறித்த நாளில், குறித்த சுப முகூர்த்த வேளையில் அபிஷேகம் செய்வதனால் "மகா கும்பாபிஷேகம்" என்று அழைக்கப்படுகின்றது.

இத்தனை பெருமை வாய்ந்த மகாகும்பாபிஷேகத்தை திறம்பட நடாத்தி வைத்த சிவாச்சாரியார்களுக்கும், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும், இரத்தோட்டை வாழ் இந்து பொது மக்களுக்கும், இப்புண்ணிய கைங்கரியத்தில் தொண்டாற்றிய அன்பர்கள், பங்குபற்றிய பக்த பெருமக்கள், தரிசித்த அடியார்கள் யாவரும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நீடூழி வாழ எனது வாழ்த்துக்கள். இக்கும்பாபிஷேகத்தினை ஒட்டி மலரும் இம்மலரானது, அருள் மணம் வீசும் தெய்வ மலராக மலர்ந்து மிளிர்வதற்கு விக்கினங்களை தீர்க்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பாதங்களை போற்றி துதித்து, எமது நல்லாசிகளை நல்குவோமாக.

*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து."*

**சுபமஸ்த்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் கணபதி துணை



"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

பல ஆண்டு காலமாக பல்லின மக்களும் வந்து வழிபடும் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானத்திற்கு பெரும் குறைப்பாடாக இருந்து வந்த இராஜகோபுரம் இல்லாத நிலை 22.03.2000ம் ஆண்டு புதன் கிழமை ஆலய தர்மகத்தாக்கள், பக்தர்கள், நலன்விரும்பிகள், கொடைவள்ளல்கள் அனைவரினதும் பெரும் முயற்சியால் நிறைவேறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைவதுடன் எமது நாட்டிலே சாந்தி, சமாதானம், அமைதி யாவும் மலர்ந்து சகல மக்களும் சந்தோஷமாக வாழ ஸ்ரீ செல்வ விநாயகரின் கிருபை கிடைக்க வேண்டுமென்றும், இராஜகோபுர கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்


## வி. செல்லையா பிரதர்ஸ்

(கொழுந்து கடை)
இலக்கம். 52, நிக்கலோய வீதி,
இரத்தோட்டை.
தொலைபேசி இலக்கம் : 066-55345

**கொழுந்து, பசும்பால், உள்நாட்டு விலைப்பொருட்களின் சேகரிப்பாளர்களும்**
**திரமான தேயிலை மற்றும் மா வகைகளின் பிரபல விற்பனையாளர்களும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வே. இராதாகிருஷ்ணன். ஜே. பி. யூ. எம்

அமைச்சர்

கைத்தொழில், வர்த்தக, வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உள்ளக கட்டமைப்பு,
கால்நடை அபிவிருத்தி, இந்து கலாசார அலுவல்கள், கல்வி(தமிழ்), சமூக சேவைகள், புனருத்தாரண
அலுவல்கள் அமைச்சு

**மத்திய மாகாணசபை**



உலக மதங்களிலே எமது மதமான இந்து மதம் மிகவும் தொன்மையானதும், ஆழமான வாழ்வியல் தத்துவங்களைக் கொண்டதுமாகும். மக்கள் மத்தியிலே மத இரீதியான கருத்துக்கள் நிலவி நிலை பெறும் போது சமூக இரீதியான மாற்றங்கள் சுமூகமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆகவே எமது மத அமைப்புகளும் மேற்படி நிலையை எய்த நம் மக்கள் ஆவண செய்ய வேண்டும்.

இராஜகோபுர மகா கும்பாபிஷேகத்தினை இன்று நிறைவேற்றிக்கொண்டிருக்கும் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் மென்மேலும் சமயப் பணியாற்றி, இப்பகுதி வாழ் மக்கள் தம் வாழ்வில் மேலும் முன்னேற வழிகோருமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, இவ்விழாவில் பங்கேற்க என்னை அழைத்தமைக்காக நன்றியும் நல்லாசியும் கூறி விடைப்பெறுகின்றேன்.

வே. இராதாகிருஷ்ணன்
அமைச்சர்
மத்திய மாகாணசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற்று
நாட்டில் சமாதானம் நிலவ வாழ்த்துகின்றோம்



# MOHANS

சகல வயது பிரிவினர்க்கும் ஏற்ற ஆடைத்தெரிவுகளுக்கு,
உங்கள் எண்ணம் போல் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்

**மோகன்ஸ்**

12, பிரதான வீதி, இரத்தோட்டை

தொலைபேசி : 066 – 55348



நாடு நலம் பெற ஸ்ரீ செல்வ விநாயகரின் திருவருள் கிட்டட்டும்



**K. ராஜா ஆசாரியார்**


35, கொடபொல வீதி,
மாத்தளை.
தொலைபேசி : 066-23464

தரமான தங்கத்தில் குறித்த நேரத்தில்
நவீன டிசைன் தங்க நகைகளை
செய்து கொள்ள நாடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



மாத்தளை எனும் புண்ணியபூமியில் இரத்தோட்டை நகரில் அற்புதங்கள் காட்டி அருள் சுரக்கும் ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமான் திருக்கோயிலுக்கு பல இலட்ச ரூபாய் செலவில் இராஜ கோபுர திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்று கும்பாபிஷேகம் இனிதே நடைபெறுவது இந்துக்கள் அனைவருக்கும் மிகப்பெருமையே, புண்ணியமே!!

இந்து சமய வளர்ச்சியில் இன்று ஆலய பரிபாலன சபைகளின் பங்களிப்பே மிக முக்கியமானதாகும். அவர்களே இந்து சமுதாயத்தை வழி நடாத்தும் பாரிய பணியில் ஈடுபடவேண்டியுள்ளது. இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், தலைவர் **K.** கருப்பையா தலைமையில் மிகச்சிறப்பாக துரிதமாக செயற்பட்டு வருவதை பாராட்டாமல் இருக்கமுடியாது.

சிறு கோயிலாக இருந்த ஸ்ரீ செல்வ விநாயகர் பெருமான் ஆலயத்தில் சித்திரத்தேர், இராஜகோபுரம், அறநெறிபாடசாலை, தையல் வகுப்பு, தட்டச்சு வகுப்பு, கணணி வகுப்பு, கலை நிகழ்ச்சிகள், திருமணங்கள் நடாத்தக்கூடிய கலாசார மண்டபம் போன்ற பணிகள் செய்து முடித்ததின் மூலம், இந்து சமுதாயத்திற்கு சிறந்த பணியாற்ற தயாராகவுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. எனவே அவர்களது பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றேன். அனைவருக்கும் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மகாகணபதியின் அருள்.

முத்துசாமி சிவஞானம்
மத்திய மாகாண சபை உறுப்பினர்
228, மெயின் வீதி,
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைப்பெற இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்

புஷ்பா ஜூவலர்ஸ்

புஷ்பா ஜூவலர்ஸ்
32, காலி வீதி, தெகிவளை.

தொலைபேசி : 01 – 719195

**நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு தலைநகரில் தலைசிறந்த நகையகம்**

---

## நாடு நலம்பெற செல்வ விநாயகரின் நல்லருள் பெருகட்டும்

# AMBIGA CENTER

*Velona Super Market*
*112/A4, Keyzer Street,*
*Colombo - 11*
*Telephone : 01-348647*



**WHOLESALE DEALERS**
**IN**
**READYMADE GARMENTS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සභාපති,
පාලක මණ්ඩලය,
ගණදෙවි කෝවිල,
රත්තොට.

## රත්තොට ප්‍රාදේශීය සභාවේ සභාපති තුමාගේ පණිවිඩය.


රත්තොට ගණදෙවි කෝවිලේ මෙම උත්සවයේදී මෙවැනි පණිවිඩයක් දීමට ලැබීම ගැන මම ඉතා සතුටු වෙමි.

පැරණි සිද්ධස්ථානයක් වූ මෙම කෝවිල දිනෙන් දින දියුණු වන කාගෙත් පූජා භක්තියට පාත්‍ර ස්ථානයක් බව කිව යුතුය. වර්ථමාන පාලක සභාව තුළින් දේවාලයේ දියුණුව සීඝ්‍ර ලෙස වැඩිවීම පිළිබදව සභාවට ස්තුතිය පුද කරමින් ආගමික පරිසරයට නැඹුරු වූ යහපත් සමාජයක් බිහිවේවායි පතමි.

ටී. ජී. ජයතිස්ස,
සභාපති,
රත්තොට ප්‍රාදේශීය සභාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்று
அடியார்களுக்கு விநாயகர் அருள் பாலிக்குக



## கண்டி ஸ்டோர்ஸ்

இலக்கம் 4, T.D. [illegible]
இரத்தோட்டை.
தொலைபேசி : 066-[illegible]



சகல விதமான
உணவுப்பொருட்களையும்
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

---

புனருத்தாபனம் பெற்று புதுப்பொழிவுடன் திகழும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
மேலும் விருத்தி பெற வாழ்த்துகின்றோம்

## Jameels Trade Centre



**24, 26, Main Street,**
**RATTOTA.**
**Telephone: 066-55353**

BRANCH: JAMEEL TEX 59 A, MAIN STREET, RATTOTA

*Experts in Ladies Readymade Garments & Gents Tailoring*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர் அவர்கள்களின் ஆசியுரை

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



*திரு. ச. சந்திரசேகரம்*

வாழ்க்கையிலே மானிட வர்க்கம் மேன்மையுற வேண்டுமெனில் பக்தியும் இறைவழிபாடும் அவசியமாகும். எனவே தான் எமது முன்னோர் ஆகம சிற்ப சாஸ்த்திர விதிகளின் படி திருக்கோயில்களை அமைத்து வழிபாடு செய்தனர்.

இந்த வழியிலே தான் மாத்தளை முத்துமாரியம்பாளை மையமாகக் கொண்டு நாற் திசைகளிலும் ஆலயங்கள் பல அமைக்கப்பட்டு, பக்தி நெறி வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்காபுரியின் மதுரை மாநகர் என்ற பெயர் பூத்த மாத்தளை நகருக்கு பெருமை சேர்க்கும் ஆலயங்களாக இவ்வாலயங்கள் விளங்குகின்றன. அவ்வகையில் மாத்தளையின் வடக்குத் திசையின் கண் அமைந்துள்ள இரத்தோட்டை நகரில் அமையப்பெற்றுள்ள ஆலயங்களும் அணி செய்கின்றன.

இரத்தோட்டை நகரிலே அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் அந்நகரை அணி செய்கின்ற ஓர் சக்திமிக்க ஆலயமாகும். இவ்வாலயத்திற்குப் பேரழகைத் தரக்கூடிய இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு, அதற்கு திருமுழுக்கு நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதையிட்டு பேரானந்தம் அடைகின்றேன். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம் தரும்" என்பார்கள். இவ்வாலயத்திற்கு வருகை தரும் பக்த கோடிகளுக்கு கோபுர தரிசனம் பெற வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்த, இரத்தோட்டை விநாயகர் ஆலய அறங்காவலர் சபையினரையும், பெருமக்களையும் மனமுவந்து பாராட்டுகின்றேன்.

இரத்தோட்டை வாழ் இந்து மக்களும், பரிபாலன சபையினரும் கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியிட முன் வந்ததை இட்டும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திருப்பணியையே பெரும்பணியாகக் கொண்ட பரிபாலன சபையினர் தாராள மனம் படைத்த பக்த பெருமக்களின் ஒத்துழைப்பையும், பொருள் உதவியையும் பெற்று வினை தீர்க்கும் விநாயகனுக்கு, இராஜகோபுரம் அமைத்து, சைவத்தினையும் தமிழையும் வளர்க்க எடுத்துக்கொண்ட பெரும்பணியை நாம் பாராட்டுகின்றோம். அத்துடன் கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்று எல்லோரும் விநாயகப்பெருமானின் அருள் பெற்றுய்ய, எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரியம்மனை ஆலய பரிபாலன சபையின் சார்பில் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

**சண்முகம் சந்திரசேகரம்**
**தலைவர்**
**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வ விநாயகரின் திருவருள் யாவருக்கும் கிடைக்க
பிரார்த்திக்கின்றோம்

# தனுசன் ஸ்டோர்ஸ்

இலக்கம் 04, கம்மடுவ வீதி, இரத்தோட்டை



உணவுப்பொருட்கள் மற்றும்
பாடசாலை உபகரணங்களை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்

**துயர் நீங்கி இன்ப வாழ்வு பெற எம்பெருமான் விநாயகரின்
நல்லருள் கிடைக்கட்டும்**



# K. கிருஷ்ணா

பவுன் புரோக்கர்ஸ்



இலக்கம் 19, நிக்கலோயா வீதி,
இரத்தோட்டை.
தொலைபேசி : 066-55243

**உத்தரவு பெற்ற நகை அடகு பிடிப்பாளர்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



சேவாஜோதி எஸ். முத்தையா
அறங்காவலர் மெதமகாநுவர, மொரகாஹமுல்ல (முருகாமலை).
ஸ்ரீ முருகன் ஆலயம். அகில இலங்கை சமாதான நீதவான்.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இன்று நம் நாட்டிற்கும், மக்களுக்கும் பேருருளை பொழிந்திடச் செய்யும் திருநாளாகும்.

மலையக மக்கள் காலடி பதித்த இடங்களிலெல்லாம், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பொன் மொழிக்கேற்ப தாங்கள் வாழும் இடமெங்கும் தெய்வத்திருத்தலங்களை அமைத்து, வழிபட்டு வருவதுடன் இந்துமத, கலாசார, பண்பாட்டு, பாரம்பரியங்களையும் வளர்த்து பாதுகாத்து வருகின்றனர். பல்லின, பல்மதப்பாங்கான நம்நாட்டில் இன, மத, ஒற்றுமைக்கு நமது ஆலயங்கள் நல்ல கேந்திரங்களாக திகழ்கின்றன.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் மகிமையும் பேரருளும் மிக்க ஆலயமாக விளங்கி வருகின்றது. இவ்வாலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான திருப்பணிகளில் ஈடுபட்டு தொண்டாற்றும் இவ்வாலய பரிபாலன சபையினர்களுக்கும் இரத்தோட்டை பிரதேச மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களும் நன்றியும் உரித்தாகுக.

நம்நாடும், மக்களும் துன்பங்களில் இருந்து விடுபட்டு, சமாதானமாகவும், அன்பாகவும், அமைதியாவும், இன்பமாகவும் நலமாய், வளமாய் வாழ பேரருள் புரிவாய் எம்பெருமானே! விநாயகப்பெருமானே! என்பதே எனது பிரார்த்தனை.

நன்றியுடன்
எஸ். முத்தையா
லக்கிலேண்ட் பிஸ்கட்,
குண்டசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைபெற
விநாயகரின் திருவருளை வேண்டுகின்றோம்



## சரண்யா ஜூவலர்ஸ்

66 A1, காலி வீதி,
தெகிவளை.
தொலைபேசி : 01-732636

**சுத்தமான தங்கத்தில் அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
தலைநகரில் தனித்துவமான நகைமாளிகை**

மக்கள் மனம் மகிழ்ந்து நாடு செழிக்க செல்வ விநாயகர்
துணை செய்யட்டும்



## காந்தி கபே

55A, MAIN STREET,
RATTOTA.



**உரிமையாளர்**
V. சண்முககாந்தி

சைவ, அசைவ உணவு வகைகளை சுவையாகவும் சுடச்சுடவும்
பெற்றுக்கொள்ள சிறந்த உணவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நீர்வளம், நிலவளம், மலைவளம் ஒருங்கே அமையப்பெற்ற மத்திய மாகாணத்தில் மாத்தளை மாநகரத்தின் கண் இரத்தோட்டை வாழ் சைவப் பெருமக்களின் அபிலாஷைகளுக்கிணங்க சர்வ விக்கினங்களையும் தீர்த்தருள ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். மனிதனது ஆன்ம ஈடேற்றத்திற்கும், துன்ப நீக்கத்திற்கும் கோயில் வழிபாடு அவசியமானது. இதனையே நம்முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என கூறினார்கள். மெய்யன்பர் உள்ளமெல்லாம் நிறைந்திருந்து அருள் பொழியும் ஸ்ரீ செல்வ விநாயகரின் பேரருளின் பயனாக இன்று தேவஸ்தான இராஜகோபுரம் விண்ணோங்கி எழிலோடு உயர்ந்து நிற்பதைக்காணும் போது எனது இரத்தோட்டை வாழ் சைவ அன்பர்கள் முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனோ என வியக்கின்றேன்.

தேவஸ்தான திருப்பணியின் பூரணத்துவம் இராஜகோபுரத்தினை உருவாக்குவதிலேயே தங்கியுள்ளது. தேவஸ்தான பரிபாலன சபை இதன் பொருட்டு எடுத்துக்கொண்ட அயரா பெரும் முயற்சியின் பயனாகவும், மெய்யன்பர்கள், நலன் விரும்பிகள், கொடைவள்ளல்கள் அனைவரதும் ஒத்துழைப்பின் விளைவாகவும் உருவாகி நிற்கும் இராஜகோபுரம் பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. சைவ உலகம் என்றும் பாராட்டும் இந்த நல்ல திருப்பணியை கண்ணுங் கருத்துமாக திறம்பட செய்து முடித்த இவர்களின் திருப்பணி மென்மேலும் சிறக்க பிரார்த்திப்பதோடு, ஸ்ரீ செல்வ விநாயகரின் திருநாமம் அடியார்களின் உள்ளத்தில் இருள் அகற்றி ஒளி பெருக்கி பேரின்பமயமாக்குவதைப் போன்று இம் மலரும் சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

**செ. சுகுமாரன்**
**இரத்தோட்டை பிரதேச சபை,**
**முன்னாள் உப தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிய தென்றல் இசைபாட
இசையில் இயற்கையும் அசைந்தாட
வான் முகில்கள் கீழ் வந்து
வாழ்த்துக்கள் பாட
வானும் மண்ணும்
வாழ்த்திக் கொண்டாட
ஆனை முகத்தானின் ஆலயத்தில் அரங்கேறும்
கலசாபிஷேகம்
விக்கினங்கள் ஏதுமின்றி
விநயமாய் நடந்திட
விநாயகா
உனை நாம் பிரார்த்திக்கின்றோம்.
கலசாபிஷேகம் வெற்றிப்பெற.....

# நல்வாழ்த்துக்கள்

ஆசிரியர்கள்
மிட்லன்ஸ் தமிழ் வித்தியாலயம்
கம்மடுவ தமிழ் வித்தியாலயம்
அப்புகஸ்பிட்டிய தமிழ் வித்தியாலயம்
நாகல தமிழ் வித்தியாலயம்
வேவல்மட தமிழ் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மாநகராம் மாத்தளையின் மாணிக்கமாய் விளங்கும் இரத்தோட்டை நகரின் நுழைவாயிலிலே கம்பீரமாய் எழுந்து நிற்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் இராஜ கோபுர மகாகும்பாபிஷேக விழாவிற்கு வாழ்த்துக்களை வழங்குவதில் நான் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

என்பது ஆன்றோர் வாக்கு. ஆம் இந்துக்களை பொறுத்தமட்டில் தாம் வாழுமிடங்களிலெல்லாம் ஆலயம் கட்டி ஆண்டவனை தரிசிப்பதை முக்கிய கடமையாக கொண்டிருக்கின்றனர். ஆலயம் என்பது ஆன்மாக்களின் மனதை ஒரு நிலைப்படுத்துவது எனப் பொருள்படும். ஆண்டவனிடம் அந்த இலயிப்பை ஏற்படுத்துவது ஆலயத்தின் கோபுரமேயாகும். தூரத்தே வருகின்ற ஒருவன் கூட கோபுரத்தை கண்டவுடன் தனது ஏனைய நினைவுகளை மறந்து உடனே கடவுளை பிரார்த்திக்கின்றான். ஆலயத்திற்கு அருகில் வந்தவுடன் நாம் முதல் முதல் தரிசிப்பது கோபுரத்தையேயாகும். தூல லிங்கமாய் கோபுரத்தை தரிசித்த பின்பே உள்ளே சென்று மூர்த்தங்களை வணங்குகின்றோம். அந்தளவிற்கு கோபுர தரிசனம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சாதாரண மானிடர் வசிக்கும் இருப்பிடத்தைவிட ஆண்டவன் இருக்கின்ற ஆலயமே உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அன்றைய மன்னர்கள் முதற்கொண்டு இன்றைய சாதாரண மனிதர்வரை கோபுரங்களை உயரமாக அமைத்து வருகின்றனர்.

இந்த வகையில் எழில் மிகுந்த இரத்தோட்டை நகரின் நுழைவாயிலிலே அமைந்திருக்கும் இந்த செல்வ விநாயகர் ஆலயம் இந்நகருக்கு ஒளியூட்டுவதாய் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட ஓர் ஆலயம் இவ்விடத்தில் அமைவதற்கு காரணமாய் இருந்த நம் முன்னோர்களை நினைவு கூறுவதில் பெருமையடைகின்றேன்.

காலத்திற்கு காலம் இவ்வாலயத்தை நிர்வகித்து வந்த அறங்காவல் சபையினர் சிறுகச் சிறுக இவ்வாலயம் உயர்வதற்கு காரணகர்த்தாக்களாக இருந்து வருகின்றனர். தற்போது நிர்வாகத்தில் இருக்கும் அறங்காவல் சபையினரின் அயராத உழைப்பினாலும், சமய தொண்டு செய்வதை பெறும் பேறாக எண்ணி கருமமாற்றி வருகின்றமையாலும் இவ்வாலயத்தின் முக்கிய குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்து வருகின்றனர். இவர்களது முயற்சியினாலேயே வசந்த மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அழகிய சித்திரத்தேர் உருவாகியது. கம்பீரமான எழில் கொஞ்சும் இராஜகோபுரம் எழுந்து நிற்கிறது. இவர்களுடைய தெய்வீக சேவை மென்மேலும் வளர்ச்சிப்பெற எனது மன பூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, எமது இந்து மக்களின் கல்வி, கலை, கலாசார வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் மென்மேலும் தங்கள் பங்களிப்பை நல்குவார்கள் எனவும் எதிர்பார்த்து இவர்களது நற்பணி தொடர விக்கினம் தீர்க்கும் விநாயகனின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**S.** கணேசன்
அதிபர்
இரத்தோட்டை இந்துகல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

රත්තොට ශ්‍රී සෙල්ව විනායගර් කෝවිලේ පැවැත්වෙන
රාජ කෝපුර කුම්භාබිශේක උත්සවයට
අපගේ උණුසුම් සුභ පැතුම්

ඒ.එල්. උපාලි නන්දසේන

# උදාර ට්‍රේඩ්සෙන්ටර්,

(තෑගි භාණ්ඩ, පාසැල් උපකරණ, සෙල්ලම් බඩු, සුවඳ විලවුන්)
අංක. 76
මාතලේ පාර,
රත්තොට.

රත්තොට ශ්‍රී සෙල්ව විනායගර් කෝවිලේ පැවැත්වෙන
රාජ කෝපුර කුම්භාබිශේක උත්සවයට
අපගේ උණුසුම් සුභ පැතුම්

නිහාල් කාඳුගොඩ (J.P)

# නිහාල් ස්ටෝර්ස්

(තොග සහ සිල්ලර ව්‍යාපාරිකයෝ)
නො. 01. ටී.ඩී. ජයරත්න මාවත, රත්තොට.
දුරකථන :-066-55408

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரட்டும் அபிவிருத்திப் பணிகள்



இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி மனமகிழ்ச்சியடைவதுடன், கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல செல்வ விநாயகனின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

1958ம் ஆண்டு முதல் ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் இந்த ஆலயத்தின் செயலாளராக நான் பணியாற்றியுள்ளேன். அக்காலப்பகுதியில் புகழ்பெற்று விளங்கிய சமயச் சொற்பொழிவாளர்களான திருமுருக கிருபானந்தவாரியார், நல்லை ஆதீனம் ஞானசம்பந்தர், டாக்டர் சிவ அன்பு, மணிபாகவதர், செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா போன்றவர்களை ஆலயத்திற்கு வரவழைத்து சமய சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தமை இன்றும்

மறக்கமுடியாத சம்பவங்களாகும். இன்றைய ஆலய நிருவாக சபையினர் திரு K. கருப்பையா அவர்களின் தலைமையில் விவேகத்துடனும் செயல்திறனுடனும் திருப்பணிகளில் ஈடுபடுவதைக் கண்டு வியப்படைவதுடன் மகிழ்ச்சியும் அடைகின்றேன். செல்வ விநாயகர் ஆலயத்தில் மிகக்குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய திருப்பணிகள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இதையிட்டு இரத்தோட்டை இந்து மக்களின் சார்பில் நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் நிருவாக சபையினருக்கு நல்லாசிகளையும் வழங்குகின்றேன். இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று நாடு நலம் பெற விநாயகனை வேண்டுகின்றேன்.

சுபம்.

P. சொக்கலிங்கம் K.P.
முன்னாள் ஆலய செயலாளர்
இரத்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர் விலகி நல்வாழ்வு கிடைக்க இராஜகோபுர கும்பாபிஷேகம் வழி செய்ய வேண்டுமென விநாயகரை வேண்டுகின்றோம்

# ராஜா மெடிக்கல்ஸ்



**மருந்துப்பொருட்கள், குளிரூட்டப்பட்ட உணவுவகைகள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட் வகைகளுக்கு நாட வேண்டிய நம்பிக்கையான நிறுவனம்**

இலக்கம் 5, கம்மடுவ வீதி,
இரத்தோட்டை.
தொலைபேசி : 066 – 55441

---

இராஜகோபுர கும்பாபிஷேகம் நடந்து மக்கள் நல்வாழ்வு பெற்று நாட்டில் சமாதானம் ஏற்பட வாழ்த்துகிறோம்

# கிருஷ்ணா

## டெக்ஸ்டயில் & டெயிலரிங் சென்டர்



இலக்கம் 6, பிரதான வீதி,
இரத்தோட்டை.
தொலைபேசி : 066 – 55315

உங்கள் எண்ணம் போல சகல விதமான ஆடைத்தெரிவுகளுக்கும் சகல வயது பிரிவினருக்கும் ஏற்ற ரெடிமேட் ஆடைகளுக்கும் இரத்தோட்டையில் புகழ் பெற்ற ஜவுளி மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் அருள் வேண்டி பிரார்த்திப்போமாக!



மலையகத்தின் வடக்கு வாயிலெனத் திகழும் மாத்தளை மாவட்டத்தில் மலையகத்தவர் தம்மினத்துவ தனித்துவத்துடனும், பாரம்பரிய பண்பாட்டு சிறப்புடனும் வாழும் பகுதிகளில் இரத்தோட்டை நகர் தனிச் சிறப்பு கொண்டது. மழைவளமும், மண்வளமும், பயிர் வளமும், கண்கவர் எழில் வளமும் மிக்க இரத்தோட்டையின் மலைவளம் வரலாற்றின் வரிகளில் களி நடம் பூண்டதாகும். இராமயணத்துடன் தொடர்புடைய "இராவணகம" இராஜ இரகசியங்களை பரிமாறிக் கொள்கின்ற இடமாக விளங்கிய "ரகஸ்தொட்ட" என்னும் "அடை" என்பனவெல்லாம் இந்நகரின் சிறப்பிற்கு கட்டியம் கூறி நிற்பவை.

நக்கில்ஸ் சரிவுகளில் கோலமிட்டு அன்னை மகாவலி தாய்க்கு நீரையேந்தும் சிற்றருவிகள் அள்ளி அள்ளி வழங்கும் சுகந்தத்தின் களிப்பில் திகழும் இரத்தோட்டை நகரில் அருள்மிகு செல்வ விநாயகப் பெருமான் கோயில் கொண்டு விக்கினங்களை தீர்த்து காத்தருள் புரிகின்றார்.


விநாயகர் வழிப்பாடு கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்து சமயத்தில் காணப்படும் வழிப்பாட்டு நெறிகளில் விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணாபத்தியம் ஆகும். இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மலையகத்தில் இன்று ஏற்பட்டுள்ள இந்து சமய எழுச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம். ஓர் ஆலயத்தின் திருப்பணிகளில் இராஜகோபுரம் முக்கியமானது. நமது ஆலய அமைப்பை பிரபஞ்சத்தின் மாதிரி உருவம் என்று ஒப்பிட்டு கூறுவதுண்டு. இராஜகோபுரத்தில் அண்டத்தின் எல்லா படித்தரங்களிலுமுள்ள அனைத்தும் இடம் பெற்றுள்ளன. ஸ்தூல லிங்கமென்று இராஜகோபுரத்தை இயம்புவார்கள். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது ஆன்றோர் வாக்கு. கோயில் வாயில் என்னும் பெருமை இதற்குண்டு. திருமூலர் வாய் கோபுர வாசல் என்றார். பஞ்ச பூதத்தை உணர்த்த கலைமேவும் தலை வாசலாக இராஜகோபுரம் விளங்குகின்றது.

இரத்தோட்டை அருள் மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு விழா நடாத்தும் ஆலய பரிபாலன சபையின் தலைவர் கா. கருப்பையா உட்பட பரிபாலன சபை அனைத்து உறுப்பினர்கள் மற்றும் வித்தியாலய அதிபர், வர்த்தகர்கள் உட்பட மெய்யடியார்களினதும் தொண்டினை பாராட்டுவதுடன் அவர்கள் நிர்மாணித்து வரும் கலாசார மண்டபம் சிறப்புறவும் எல்லோரும் இன்புற்று நலம் பெறவும் ஓங்கார வடிவினனான ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.


மாத்தளை பெ. வடிவேலன் பி. ஏ.
கலாசார அதிகாரி
இந்து சமய கலாசார திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நிறைவுற நல்வாழ்த்துக்கள்



# Monara Textiles

134, Second Cross Street,
**COLOMBO 11**
Telephone : **326090**

*Authorised Distributors For*

PUGODA TEXTILES LANKA LTD
VEYANGODA TEXTILES MILLS LTD

---

**நல்லது நடந்து நாடு நலம்பெற வாழ்த்துகின்றோம்**

# JEWEL PLAZA

174, Main Street, Matale.
Telephone : 066-23684

**தரமான தங்கத்தில் நியாய விலையில் உங்களுக்கு தேவையான தங்க நகைகளை செய்து கொள்ள நாடுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி





இயற்கை எழில் கொஞ்சும் இரத்தோட்டை நகரை சுற்றிலும் பச்சை நிறக் கம்பளங்கள் விரித்தது போல் தேயிலை மலைகள். அம்மலைகளில் இருந்து ஓடிவரும் அருவிகள். எங்கு பார்த்தாலும் பசுமை, அழகுமிகுந்த இடங்களிலெல்லாம் ஆலயங்கள் கட்டி இயற்கையை இறையாக வழிபட்டவர்கள் நம் தமிழர்கள். இதற்கு சான்று பகரும் வண்ணம் தான் அழகு பொங்கி வழிந்தோடும் இரத்தோட்டை நகரின்கண் அழகும் அமைதியும் குன்றாது அடியார்க்கெல்லாம் அருள் மழை பொழியும் வினை தீர்க்கும் விநாயகப் பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

உடல் நோயினால் தன் மக்கள் துன்புற்று வருந்துவதையறிந்து அவர்களுக்கு அடைக்கலம் தந்து அருள்புரியவே விநாயகப் பெருமான் இரத்தோட்டையில் கோவில் கொண்டருளியுள்ளார். ஆலயத்தின் திருப்பணிகளில் ஒன்றான இராஜகோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெறுவதையறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கோபுரத்தை கட்டி முடித்த அடியார்களுக்கு இன்னும் பல கோடி புண்ணியங்கள் கிட்ட எல்லாம் வல்ல விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

குறிகளும் அடையாளமும் காட்டி இறைவன் அருள் வெள்ளத்தில் ஆழ்த்தி இன்புறுத்துகின்றவை கோயில்கள். பெருந்தூரத்தில் வரும்போதே தன் திருக்கோபுரத்தால் இறை உருக்காட்டி நெருங்கினார்க்கு இறைவனின் திருக்கோலத்தை காட்டி உள்ளத்திற்கு துணை நிற்கின்றவை கோயில்கள். மனிதனை புனிதமாக்குவது கோயில்கள். தெய்வ அருளாற்றல் இங்கு நிலவி கொண்டிருக்கிறது. இங்கு வந்து வழிபடுவோரது வினைகள் யாவும் வெந்து சாம்பலாகின்றன. திருமூலர் சொல்வது போல் தேடித்திரிந்து தரிசித்து நலம் பெற வேண்டிய கோவில்களில் இதுவும் ஒன்று. குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெற எனது வாழ்த்துக்கள்.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து விடும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினையறுமே

மயில்வாகனம் பாஸ்கரன்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



எமது ஆலய இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்ற இத்திருநாளிலே கோடி புண்ணியம் கிட்டும் கோபுர தரிசன பாக்கியம் எமக்கு கிடைப்பதையிட்டு அடியேனும் பக்தி பரவசம் அடைகின்றேன்.

இப்புண்ணிய நாளிலே எமது சந்ததியினருக்காக ஆலயம் அமைத்த உத்தமர்களான எமது முன்னோரை நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டும். அந்த அடிப்படையில் நோக்கும்போது அமரர் சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களின் நாமம் ஞாபகத்திற்கு வருகின்றது. சைவமும் தமிழும் இரத்தோட்டையில் செழித்தோங்க அரும்பாடுபட்டு உழைத்தவர் அவர். தற்போதைய ஆலயத்தின் வடிவமைப்பும் அன்னாரின் முயற்சியினால் உருவானதே. இன்று நாம் எழுப்பிய இராஜகோபுரமும் நம் முன்னோர்களால் விட்டுச் செல்லப்பட்ட திருப்பணிகளில் ஒன்றேயாகும்.

இரத்தோட்டை நகரின் நுழைவாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான புனித வரலாற்றைக் கொண்டதாகும். இவ்வாலயத்தில் கடந்த சில வருடங்களாக பல திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன. நவக்கிரக ஆலயம், சித்திராபெளர்ணமியில் எம்பெருமான் வீதி உலா வர ஒரு சித்திரத்தேர், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இராஜகோபுர திருப்பணி, தற்போது எமது கலாசாரத்தைக் கட்டிகாப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்து கலாசார மண்டபம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

ஆலய பணி செய்வதென்பது நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு கருமமாகும். அந்த உன்னத பாக்கியத்தை எமக்கு அளித்தது எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமானே ஆகும். அவனன்றி அணுவும் அசையாது.

இப்பொன்னாளிலே எமது ஆலய திருப்பணிகளிலே அல்லும் பகலும் அயராது உழைத்த எமது நிர்வாக சபையார் அனைவருக்கும், திருப்பணி சபைக்கும், நன்கொடைகளை மனமுவந்து வழங்கிய இலங்கை வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களுக்கும் விஷேடமாக இரத்தோட்டை பொதுமக்கள் எல்லோருக்கும், இரத்தோட்டையைச் சூழவுள்ள ஆலயங்களின் அறங்காவல் சபையினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டில் எமக்கு உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அன்பர்களுக்கும், அனுசரனை வழங்கிய நிறுவனங்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெரியோர்கள் அனைவருக்ககும், இவ்விழாவினை இனிதே நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

தன்னை நாடி வந்தோர் பிணி தீர்க்கும் எம்பெருமான் விநாயகப்பெருமானின் திருவடிகளைத் தொழுது நாட்டுக்கும், மக்களுக்கும் சாந்தியும், சமாதானமும், சௌபாக்கியமும் கிடைக்க எம்பெருமானின் திருவருள் வேண்டி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்."

S.நடராஜா
செயலாளர்
ஸ்ரீ செல்வ விநாயக ஆலய நிர்வாக சபை
இரத்தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பொழிவுபெறும் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர்
ஆலயம் மேலும் வளர்ச்சி பெற எமது நல்வாழ்த்துக்கள்

RATTOTA
GOLD HOUSE

இலக்கம் 36, பிரதான வீதி,
இரத்தோட்டை.
தொலைபேசி : 066 - 55217

உங்கள் எண்ணம் போல அழகிய வடிவங்களில் அசல் 22 கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள இரத்தோட்டையில் தலை சிறந்த நகைமாளிகை

ஸ்ரீ செல்வ விநாயகரின் நல்லருள் இப்புனித நாளில்
அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்

நியு பிரியா ஹோட்டல்

56, பிரதான வீதி, இரத்தோட்டை.
தொலைபேசி : 066 - 55419

சுவை மிகுந்த சைவ, அசைவ உணவு வகைகளை சுடச்சுட
சுத்தமாகப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய சிறந்த உணவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



நீர்வளம் நிலவளம், மலைவளம், மழைவளம், கலைவளம், கனிவளம் அனைத்து வளங்களும் நிறைந்து விளங்கும் இரத்தோட்டை நகரின் நுழைவாயிலில் நமக்கு காவல் தெய்வமாக வீற்றிருந்து நகரக்கு வருவோரை வரவேற்று, வாழ்த்துக் கூறி, ஆசி வழங்கி அருள் பாலிக்கும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் திருக்கோவில் கம்பீரமாக காட்சியளிக்கிறது.


இவ்வாலயத்தில் இவ்வளவு காலமும் நிறைவேற்றப்படாமல் இருந்து வந்த இராஜகோபுர திருப்பணி விநாயகப் பெருமானின் திருவருளால் தற்போது பூர்த்தியடைந்து, இராஜகோபுர புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று (22. 03. 2000) நடைபெற திருவருள் பாலித்துள்ளமை நமது இதயங்களில் பால் வார்க்கும் ஓர் செய்தியாகும். இது இவ்வூர் மக்களுக்கு ஏற்படவிருக்கும் நிரந்தர விடிவிற்கு ஓர் நல்ல சகுனமாகும்.

இன்றைய நாளில் எம்மைக் காத்தருளும் குலதெய்வமான ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் நமது விக்கினங்களை பறந்தோட செய்து நம் அனைவரின் வாழ்க்கையிலும் ஒளியேற்றி அருள் பாலிக்க வேண்டுமென்று உளமாற பிரார்த்திக்கின்றேன்.

எஸ். விஸ்வநாதன்
பொருளாளர்,
இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயக ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெற்று நாடு நலம்பெற நல்வாழ்த்துக்கள்**



# கே.வி. ஜுவலர்ஸ்

இலக்கம் 08, பிரதான வீதி, இரத்தோட்டை. தொலைபேசி : 066 – 55131

அசல் 22 கரட் தங்க நகைகளை நியாயமான
விலையில் நீங்கள் விரும்பும் அழகிய நவீன
டிசைன்களில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
நகைமாளிகை

**இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள்**




566B, Main Street,
MATALE.
Telephone : 066-31033

உங்கள் மனதை மகிழ்ச்சியூட்டும் தரமான நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
மாத்தளையில் மறக்க முடியாத நகை மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றிகள்



ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் திருவருளால் இராஜகோபுர கும்பாபிஷேக நன்னாளில் இந்த சிறப்பு மலரை நிருவாக சபையின் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1972ம் ஆண்டுக்குப் பிறகு ஆலயத்தின் சார்பில் வெளியிடப்படுகின்ற இரண்டாவது மலர் இதுவாகும். ஆலய வரலாறு, ஆலய உற்சவங்கள் மற்றும் நடைபெற்ற திருப்பணிகள் தொடர்பாக கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அத்தோடு பெரியார்களின் ஆசிச்செய்திகள், திருவூஞ்சல் பதிகம் என்பனவும் இடம்பெற்றுள்ளன. இதிலேதும் தவறுகள் பிழைகள் இருப்பின் பெரும் மனங்கொண்டு மன்னிக்கவேண்டும்.

இந்த மலரை சிறப்பாக வெளியிட ஆசிச்செய்தி வழங்கிய பெரியார்களுக்கும் கட்டுரைகளுக்கான தகவல்கள் புகைப்படங்கள் வழங்கியவர்களுக்கும், நிதி உதவி செய்து விளம்பரம் தந்த வியாபார நிறுவன உரிமையாளர்களுக்கும், இதனை மிகச்சிறப்பான முறையில் அச்சேற்றித் தந்த கண்டி நந்தன் அச்சகத்தினருக்கும் நிருவாக சபையினரின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராஜகோபுர திருப்பணியை சிறப்பாக நிர்மாணிக்க நிதி மற்றும் பொருள் உதவி செய்த அனைத்து அடியார்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இந்த கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெற உதவிய சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் அரச சபை பிரதிநிதிகள், ஊழியர்கள் மற்றும் அன்புக்குரிய அடியார்கள் அனைவருக்கும் நிருவாக சபையினரின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இராஜகோபுர நிர்மாணத்துடன், மூலஸ்தான கோபுரம் வசந்த மண்டபம் மற்றும் முழு அளவில் ஆலயத்தையே சிற்பங்களாலும் ஓவியத்தாலும் அழகுபடுத்திய சிற்பக் கலைஞர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைபெற தொண்டாற்றிய சகல அன்பர்களுக்கும் எல்லாவிதமான சௌபாக்கியங்களையும் தந்தருள வேண்டுமென்று உளமார பிரார்த்தித்து எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

சொ. மயில்வாகனம்
மலர் (வெளியீட்டு) ஆசிரியர்
இணைச் செயலாளர்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
இரத்தோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## இரத்தோட்டை

ஸ்ரீ செல்வ விநாயகர் பேரில்

# ஆசிரிய விருத்தம்

சீர்தங்கு பனிபடரும் மலைகளுஞ் சோலையுந்
திருமருவு கின்ற தாகச்
செய்றப்பர் தேயிலைகள் வாசனா திகள் கொக்கோ
சேரும் மாத்தளைக் கண்மையாய்
ஏர்தங்கு ரத்தோட்டை வாழ்கின்ற ஐயனே
எமது துயர் களைய வேண்டும்
ஏரம்ப னேநல்ல மூர்த்தியே மூலமாய்
எழுந்தருளும் வள்ள லேநீ
ஓர்கொம்பு மிருபதமும் மும்மதமும் நால்வாயும்
ஒளிரவே ஐந்து கரமும்
உள்ளநீ வாழ்வருள வல்லையோ இதுவேளை
உன்னையே தஞ்ச மென்போம்
கார்தங்க வளமருளுஞ் ஸ்ரீ செல்வ விநாயகா
காத்தருள வேண்டு மையா
காணவே குடமுழுக் கேற்றிடும் நாதனே
கருணா கரக்க டவுளே.

கவிமணி வே. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வ விநாயகர்

# திருவூஞ்சற்பதிகம்

நூலாசிரியர்
கரணவாய் ஆரிய திராவிட பண்டிதர்
வியாகரண சிரோமணி
சிவஸ்ரீ த. காசிநாதக்குருக்கள் அவர்கள்

விக்கினேசுரர் துதி
சார்த்தூல விக்கிரீஷதம் விருத்தம்

ஸ்ரீமத்செல்வ வீநாயகம் கஜமுகம் ஸ்கந்தாக்ரஜம் வாமனம்
ரத்தோட்டா நகரே வீராஜித மஹாசன்மந் திரஸ்தம்விபும்
பக்தாபீஷ்ட வரப்ரதம் சிவசுதம் தேவம்க்ருபாம் போநிதிம்
வந்தேமூஷிக வாஹநம் த்ரிணயனம் சந்த்ரார்த்த சூடாமணிம்

காப்பு
ஆசிரிய விருத்தம்

பொன்பூத்த நல்லிலங்கா புரியி லுள்ள
புகழ்பூத்த ரத்தோட்டைக் கோயின் மேவும்
மின்பூத்த செல்வவிக்கி னேச னார்மேல்
வில்பூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
மன்பூத்த கடவுளருக் கிடுக்கண் செய்த
வன்பூத்த கயமுகனா மவுணன் றன்னைக்
கொன்பூத்த கொம்பொன்றால் வென்ற அந்தக்
குஞ்சரமா முகவனடி காப்ப தாமே.

நூல்
ஆசிரிய விருத்தம்

சீர்மேவு நாதவிந்து கால்க ளாகச்
சிவமேவு சக்தியொளிர் வீட்ட மாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்வேு மந்திரங்க ளிழைய தாகப்
பெருமையுள நான்மறைகள் கயிற தாக
ஏர்மேவு முடநிடதம் பலகை யாக
எழின்மேவு பிரணவம்பொற் பீட மாகத்
தேர்மேவு ரத்தொட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

சந்திரா தித்தர்வெண் குடைகை தாங்க
சமீரணர்தாம் வீசுஞ்சீர்க் கவரி தேங்க
சிந்துபதி சாந்தாற்றி யுவந்து வாங்க
தேவர்பதி வட்டமசைஇப் புளகம் வீங்க
வந்துபணி யடியர்துதி வசன மோங்க
வன்கயவ ரவ்விடம்விட் டகன்று நீங்க
சிந்தைமகிழ் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீ செல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

மங்கலமார் தேவர்சொரி மலர்கள் வீழ
வலிமைமிகு பூதர்நிரை நெருங்கிச் சூழ
தங்குசுடர் கண்டிருள்க ளழிந்து நீங்க
சாற்றவரு நல்லடியார் மலங்கள் பாழ
பொங்குறுசீர்த் துதியிசையின் மனஞ்சென் றாழ
பொற்புமிகு மரியயனே முதலோர் தாழ
தெங்குசெறி ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

புந்திமிகு சின்னரர்கள் சுருதி கூட
புனிதமுள பிரமன்பொற் றாளம் போட
சிந்தைமகிழ் தேவரம்பை யர்க ளாட
சீர்பரவு மன்பரிடர் யாவு மோட
விந்தையுள தும்புருநா ரதர்யாழ் பாட
விரும்புமறை யிசையெட்டுத் திசையு நீட
சிந்துரமார் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அமரர்தமை முன்னாளிற் பொருது வென்றே
அகங்கரித்த கயமுகனா மவுணன் றன்னை
சமரமதிற் கொம்பொன்றை முறித்தே யேவிச்
சடிதியிலே யுயிர்கவர்ந்த கணேச மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயமலைப் பார்ப்பதியின் மூத்த மைந்த
இபமுகமு மைங்கரமு மினிது கொண்டாய்
சிமயமுவர் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

போதமுறு வியாதமுனி சொல்ல நன்மை
பொறுந்துறுசீர்ப் பாரதத்தை மேரு வென்னும்
பூதரமா மேட்டின்கண் முறித்த கொம்பால்
பூதலத்தோ ருயவெழுதும் புண்ய மூர்த்தி
மோதகமார் கரமுடனைங் கரங்கொண் டுள்ளோய்
மூஷிகவா கனத்தினரே யாட ரூஞ்சல்
சீதமிகு ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

ஆதிசிவன் புத்திரரே யாட ரூஞ்சல்
அன்பரிடர் தீர்ப்பவரே யாட ரூஞ்சல்
வேதமுதற் பொருளினரே யாட ரூஞ்சல்
மிளிர்பாசாங் குசத்தினரே யாட ரூஞ்சல்
சோதிவடி வானவரே யாட ரூஞ்சல்
துலங்குதுதிக் கையினரே யாட ரூஞ்சல்
தீதடையா ரத்தொட்டைப் பதிசார் கோயிற்
சிறிசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

பெருமையுள கும்பமுனி கொணர்ந்த தூய்மை
பிறங்குகா விரியாகு நதியை நல்ல
கிருடையுடன் காகவுரு வாகி வந்தே
கிடக்கைதனிற் கவிழ்த்தேகும் வகைதான் செய்த
அருமணியே உனதுபதச் சேவை செய்யும்
அந்தவர மெனக்கருள்வ தெந்த நாளோ
திருமருவு ரத்தோட்டை பதிசார் கோயிற்
சிறீ செல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

வீசுசுடர்ப பொன்மகுடஞ் சிரசின் மின்ன
விளங்குறுசீர்ப் பட்டமணி நுதலின் மின்ன
பேசுமொரு மருப்பிற்கும் புரிப்பூண் மின்ன
பெரியமுறச் செவியாகுங் கவரி மின்ன
காசுமிளிர் மதாணிநிரை மார்பின் மின்ன
கருதவரு மரையிற்பொற் றுகிறான் மின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசுமிகு ரத்தோட்டை பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்

வானமரு மதிமுடியீ ராடீ ரூஞ்சல்
வல்லபைசா ரிடைமுடையீ ராடீ ரூஞ்சல்
கானமரு மார்த்தொடையீ ராடீ ரூஞ்சல்
கண்களொரு மூன்றுடையீ ராடீ ரூஞ்சல்
மானஎலி வாகனத்தீ ராடீ ரூஞ்சல்
வந்தடியேற் கருள்புரிவீ ராடீ ரூஞ்சல்
தேனமரும் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்

வாழி

பம்பியசல் லாவினம்பால் சொரிந்து வாழி
பகருமழை பொழிந்துமுகில் நன்கு வாழி
அம்மளவர் கண்டிகைநீ றென்றும் வாழி
அரியதமிழ்ப் புலவரெலா மிகுந்து வாழி
வம்புசெறி குழன்மடவார் கற்பும் வாழி
மகிமைசெறி நால்வருணத் தோரும் வாழி
செம்மைவரு ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
செல்வவிக்கி னேசனருள் வாழி வாழி.

**திருவூஞ்சல் முற்றிற்று**

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1946ம் ஆண்டு வெளியிடப்பட்ட திருப்பணி விஞ்ஞாபனத்தின் பிரதி

உ

சிவமயம்



## றத்தொட்டை ஸ்ரீ விநாயகர் ஆலய திருப்பணி விஞ்ஞாபனம்.

விருத்தம்.

"புல்லினாற் பத்துக்கோடி புனிமண்ணால் நூறுகோடி
செல்லுமாங் காலந்தன்னிற் செங்கல்லாலாயிரங் கோடி
அல்லிமென் குழலாய் கேண்மோ ஆலயமடங்கள் தம்மை
கல்லினாற் செய்தபேர்கள் கைலைவிட்டகலார் தாமே."

**தர்ம சீலர்காள்!**

இற்றைக்கு 24 வருடங்கட்கு முன்பாக, புண்ணிய சீலர்கள் சிலரால் நிறுவப்பட்ட ஷை ஆலயம் கவனிப்பாரில்லாமல் திருப்பணி, பூஜை, நைவேத்தியம் முதலியன நடைபெறாது சிறப்பற்ற முறையில் இருக்கிறது. சமய நிலையில் உச்சநிலையடைந்துவரும் இக்காலத்தில், ஷை ஆலயம் இந்நிலையில் இருக்கக்காண்பது ஒவ்வொருவருக்கும் கவலையைத்தரும் செயலாகும்.

இக்குறையை நிறைவேற்றுவதற்காக (22. 3. 46)-ல் ஷை ஆலயத்தில் கூட்டப்பெற்ற மகாசபையில், அன்று தொடக்கம் பூஜை நைவேத்தியங்கள் நடப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு, திருப்பணியையும் தொடங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சிறு துளிபல சேர்ந்து பெருவெள்ளமாதலின், அன்பர்கள் யாவரும் ஷை பணிக்குத் தங்களால் இயன்ற பணஉதவி புரிந்து, இத்தொண்டை நிறைவேற்றி, ஸ்ரீ செல்வ விநாயகர் திருவருட்செல்வர்களாக வரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

தங்கள் உதவியை விரும்பும்,

1. S. A. சுப்ரமணியம் (ஓவசியர் றத்தொட்டை)
2. S. V. இராசரத்தினம் (L. P. மாத்தளை)
3. S. வேலாயுதபிள்ளை (L. P. றத்தொட்டை)
4. M. கந்தப்பு (General Merchant றத்தொட்டை)
5. P. பத்மநாதன் ,, ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வரலாறு

இலங்கைத் திரு நாட்டில் இந்து மதத்தின் வரலாறு மிகவும் பழமையானது. இலங்கையின் ஆதி குடிகளின் வழிபாட்டு முறையானது இந்து மதத்தின் வழிபாட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தென்னிந்தியாவை காலத்திற்கு காலம் ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் தத்தமது ஆட்சிக்காலத்திலே தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் உள்ள இலங்கைத் தீவிலும் தமது அரசியல் செல்வாக்கை புகுத்தி இருக்கின்றார்கள். அந்த வகையில் இந்து மதத்தின் வழிபாட்டு முறைகள் கலை, கலாசார பண்புகள் தொடர்ச்சியாக இலங்கையின் பல பாகங்களிலும் பரவி நிலை பெற்று வந்துள்ளன.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்செய்கையை ஊக்குவிப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை அழைத்து வந்து மலையகத்தில் அவர்களை குடியமர்த்தினார்கள். இவ்விதம் இலங்கை வந்த தென்னிந்திய தமிழர்கள் தமது பாரம்பரிய இந்துமத வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து பேணுவதற்காக மலையகத்திலே தமது இஷ்ட தெய்வங்களை அங்கே பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்கள்.

இலங்கையின் மத்திய மாகாணத்திலே மாத்தளை மாவட்டத்தில் வடக்கு எல்லையை நோக்கிய புராதன நகரம் இரத்தோட்டை ஆகும். மகா பராக்கிரமபாகு, வலகம்பா மன்னர்களது ஆட்சி காலத்துடன் தொடர்புடைய நகரமாக இது கூறப்படுகிறது.

இரத்தோட்டை நகரை சுற்றிலும் பல பெருந்தோட்ட குடியிருப்புகள் அமைக்கப்பட்டு அங்கு பல ஆயிரக்கணக்கான மலையக மக்கள் குடியமர்த்தப் பட்டிருந்தார்கள். நகர் பகுதியிலே வியாபாரிகள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மற்றும் பல்வேறு தொழிற் துறை சார்ந்தவர்கள் தமது வியாபார நிலையங்களையும், வீடுகளையும் அமைத்து பல காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் சுமார் 78 வருட பழமை வாய்ந்த வரலாற்றை கொண்டதாகும். 1922ம் ஆண்டளவில் இன்று ஆலயம் அமைந்துள்ள வளவிலே ஒரு ஈரப்பலா மரத்தின் அடியில் சிறு கூடாரம் அமைத்து அதில் விநாயகர் படம் ஒன்றை வைத்து முதன்முதலாக வழிபாடு செய்யப்பட்டது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பூஜைகள் நடைபெற்று உள்ளது. திரு. சந்தனம் சாரதி அவர்கள் இந்த ஆலயவழிபாடு நடைபெற உதவியாக செயல்பட்டுள்ளார்கள். 1942ம் ஆண்டுவரை இந்த வழிபாட்டு முறை தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. அதன்பிறகு விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்காக சிறு மூலஸ்தானமும் ஒரு மண்டபமும் அமைக்கப்பட்டு 1945ம் ஆண்டளவில் சிலை வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. தனியார் ஒருவருக்கு உரிமையாக இருந்த ஆலய காணி அக்காலத்தில் ஆலய தரும கர்த்தாக்களாக செயல்பட்ட திரு. S.A. சுப்பிரமணியம், திரு S.V. இராசரத்தினம், திரு. S. வேலாயுதம்பிள்ளை, திரு. M. கந்தப்பு, திரு. P. பத்மநாதன் ஆகியோரின் பெயர்களுக்கு உறுதி எழுதப்பட்டது. பின்னர் அவர்கள் ஆலய காணி உறுதியை எதிர்காலத்தில் ஆலய நிருவாகத்தை பொறுப்பேற்கும் நிருவாக சபையினரின் பெயருக்கு எழுதினார்கள். தொடர்ந்து வருகின்ற நிருவாக சபையினர் இந்த ஆலய காணி உறுதிக்கு பொறுப்பாக இருந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946ம் ஆண்டிலே இந்த ஆலயத்தை மேலும் புனரமைத்து முறையாக பூஜைகள் நடைபெறுவதற்கு முதன் முதலாக ஒரு மகாசபை கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதன் பிறகு காலத்திற்கு காலம் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையினர் ஆலய திருப்பணிகளையும் பூஜை ஒழுங்குகளையும் செய்து வந்துள்ளனர். 1952ம் ஆண்டு சித்திரா பௌர்ணமி தேர் திருவிழா உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு முதன் முதலாக விநாயகப் பெருமான் தெருவிலே வெளிவீதி உலா எழுந்தருளி உள்ளார். 1972ம் ஆண்டு இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வரலாற்றில் முக்கிய சிறப்பு வாய்ந்த வருடமாக அமைந்தது. திரு P. பத்மநாதன் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் முன்னாள் இரத்தோட்டை இந்து கல்லூரியின் அதிபரும் ஆலய நிருவாக சபை தலைவருமான திரு. V. சபாபதிப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலின் பெயரில் ஆலயத்திலே மூலஸ்தானம், மகா மண்டபம், வசந்த மண்டபம் என்பவற்றை புதிதாக நிர்மாணித்து 1972ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை மிக சிறப்பாக மேற்கொண்டார்கள். கும்பாபிஷேக சிவாச்சாரியர்களாக சிவ ஸ்ரீ த. காசிநாத குருக்கள், சிவஸ்ரீ சாமி விஸ்வநாத குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டது சிறப்பம்சம் ஆகும்.

திரு V. சபாபதிப்பிள்ளை அதிபர் அவர்கள் கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டார். 1972ம் ஆண்டு ஆலய வரலாற்றில் முக்கிய திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்ற முக்கிய வருடமாக நினைவு கூறத்தக்கதாகும்.

தொடர்ந்து 1976ம் ஆண்டு திரு. து. கிருஸ்ணசாமி அவர்களின் தலமையிலான நிருவாக சபையினர் ஆலய வளவிலே மூன்று வீடுகளை கட்டினார்கள். இவை பொது மக்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது. சித்திரா பௌர்ணமி தேர்த் திருவிழாவிலே பயன்படுத்தப்படுகின்ற தேர் சகடைக்கான மேல் கூடாரப் பகுதி இக்காலத்தில் யாழ்பாணத்தில் இருந்து தயாரித்து கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

1980ம் ஆண்டுகளில் திரு. R. சண்முகம் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் ஆலயத்திலே கல்யாண மண்டபம் ஒன்றை அமைத்தனர். 1982ம் ஆண்டளவில் திரு. டாக்டர் R. மகாலிங்கம் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் ஆலய குருக்கள் பண்டாரம் பதவிகளை வகிப்பவர்களுக்கு சேவை காலத்தில் தங்கியிருப்பதற்கு இரண்டு வீடுகள் அமைத்தார்கள். மற்றும் ஆலயத்திற்கு முன்னால் வழி பிள்ளையார் ஆலயம் ஒன்றை அமைத்து 1984ம் ஆண்டிலே ஆலயத்தை மேலும் புனரமைத்து மகாகும்பாபிஷேகத்தை சிறப்பான முறையில் நடத்தி வைத்தார்கள். 1972ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை அடுத்து 12 வருட கால இடைவெளியில் அடுத்த மகாகும்பாபிஷேகம் 1984ல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து திரு. V. கதிரேசன், திரு. S. சண்முகவேல் ஆகியோர் 1994ம் ஆண்டுவரை நிருவாக சபையின் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றினார்கள். 1994ம் ஆண்டு இறுதியில் ஆலய நிருவாக சபையின் பொறுப்பை திரு. K. கருப்பையா அவர்களின் தலைமையிலான நிருவாக சபை ஏற்றுக்கொண்டது. 1994ம் ஆண்டு முதல் இந்த இரண்டாயிரம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திரு. K. கருப்பையா அவர்களின் தலைமையிலான சபையினர் முக்கியமான திருப்பணி வேலைகளை பல இலட்ச ரூபா செலவில் மிக குறுகிய காலத்தில் மேற்கொண்டமை ஆலய வரலாற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேடமாக குறிப்பிட வேண்டிய அம்சம் ஆகும். 1995ம் ஆண்டு ஆலயத்திலே நவக்கிரக ஆலயம் ஒன்றை அமைத்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதே வருடத்தில் சித்திரா பௌர்ணமி தேர்த்திருவிழாவிலே விநாயகர் வெளிவீதி உலா எழுந்தருள அழகிய சித்திரத் தேர் ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடத்தப்பட்டது. அவ்வருடம் முதல் இந்த இரதத்திலேயே வருடாந்த தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. 1994ம் ஆண்டிலே இராஜகோபுர திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு இந்த 2000ம் ஆண்டிலே இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைபெறுகிறது. 1999ம் ஆண்டிலே ஆலய வளவிலே இந்து கலாசார மண்டபம் ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு இன்று அதன் முதற்கட்ட வேலைகள் நிறைவு பெற்று தற்போது அடுத்த கட்டமாக முதலாம் மாடிக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1994ம் ஆண்டுமுதல் இன்றுவரை ஆலய நிருவாக பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகின்ற திரு. K. கருப்பையா அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் இடைக்காலத்திலே ஆலயத்தின் எதிர்கால நலன் கருதி முக்கிய சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதில் ஆலய காணி அளக்கப்பட்டு முறையான காணி வரைபடமும் (Plan) காணி உறுதியும் பெறப்பட்டுள்ளன. அடுத்ததாக பொதுமக்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட ஆலய வீடுகள் மூன்றும் எதிர்காலத்தில் ஆலய நிருவாகம், மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துமுகமாக மீளப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிருவாக சபை மேலும் பல அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்கால திட்டங்கள் பலவற்றை தயாரித்துள்ளது. எனவே இத்தகைய நீண்ட சிறப்பான வரலாற்றை கொண்ட இரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் மீண்டும் பல தலைமுறைகளுக்கு வளர்ச்சி பெற்று புண்ணிய தலமாக விளங்க அனைவரது நல்லாசிகளும் கிடைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1994ம் ஆண்டு ஆலய நிருவாக சபை உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய நிருவாக சபை உறுப்பினர்கள் (1998 முதல் இன்றுவரை)

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கா. கருப்பையா |
| செயலாளர் | : | சு. நடராஜா |
| பொருளாளர் | : | ஹ. விஸ்வநாதன் |
| உபதலைவர் | : | சு. விஸ்வநாதன் |
| இணைச் செயலாளர் | : | சொ. மயில்வாகனம் |
| இணைப் பொருளாளர் | : | த. நந்தகுமார் |

உறுப்பினர்கள் :

R. இராஜகோபால்
R. நகுலேஸ்வரன்
S. சாந்தகுமார்
K. ரவீந்திரன்
K. சுப்பிரமணியம்
M. பாலகிருஷ்ணன்
M. தனபாலன்
V. பழனிவேல்
K.A. கந்தையா
V. மயில்வாகனம்
K. வேலாயுதம்
R. மாணிக்கம்
ஞ. இளங்கோவன்
M. ரட்ணஜோதி
S. தேவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய நிருவாக சபையின் தலைவர்களாக இருந்து பணிபுரிந்தவர்கள்

திருவாளர்கள் :

S.A. சுப்ரமணியம் - ஓவசியர்
S.V. இராசரத்தினம்
S. வேலாயுதபிள்ளை
M. கந்தப்பு
V. சபாபதிப்பிள்ளை - அதிபர்
P. பத்மநாதன்
S. ராஜி
D. கிருஸ்ணசாமி
R. சண்முகம்
R. மகாலிங்கம் - டாக்டர்
V. கதிரேசன்
S. சண்முகவேல்
K. கருப்பையா

## திருப்பணி சபை உறுப்பினர்கள்


திரு. கா. கருப்பையா
திரு. சு. நடராஜா
திரு. ஹ. விஸ்வநாதன்
திரு. சு. சண்முகவேல்
திரு. சொ. மயில்வாகனம்
திரு. த. நந்தகுமார்
திரு. M. மோகனசுந்தரம்
திரு. V. சண்முககாந்தி
திரு. T. வேலாயுதம்
திரு. S. வசந்தராஜா
திரு. S. கணேசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரத்தேர் நிர்மாண திருப்பணி


இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் வரலாற்றிலே 1995ம் ஆண்டு சித்ரா பௌர்ணமி தேர்த்திருவிழா விஷேச சிறப்பு மிக்கதாக அமைந்தது. அதுவரை காலமும் விநாயகப் பெருமான் வெளிவீதி எழுந்தருள முழுமையாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் ஒன்று இருக்கவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக திரு. K. கருப்பையா அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் சுமார் பதினைந்து இலட்சம் ரூபா பெறுமதியுடைய புதிய சித்திரத்தேர் நிர்மாணத் திருப்பணியை 12.11.1994ல் ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிற்பி திரு. K. செல்வராசா அவர்களின் தலைமையிலான கலைஞர்கள் சுமார் தொன்னூறு நாட்களில் இந்த புதிய சித்திரத் தேரை நிர்மாணித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக குறுகிய காலத்தில் இந்த சித்திரத்தேரை நிர்மாணிப்பதற்கு இரத்தோட்டை வாழ் இந்து மக்கள் மாத்திரமன்றி மாத்தளை, கண்டி, கொழும்பு போன்ற பகுதிகளில் வாழும் சகல மக்களும் நிதி உதவி வழங்கினார்கள். சித்திரத்தேருக்கான பெறுமதி வாய்ந்த மரங்களை பெற்றுக் கொடுப்பதில் கன்சரபொல பகுதியில் வாழும் பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்பு இத்திருப்பணி சிறப்பாக நிறைவேற முக்கிய பங்களிப்பாக அமைந்தது.





1995ம் ஆண்டு சித்ரா பௌர்ணமி தேர்திருவிழாவுக்கு முதல் நாள் இடம்பெற்ற புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய மாகாண சபையின் இன்றைய முதலமைச்சர் கௌரவ நந்தமித்ர ஏக்கநாயக்க அவர்களும் நிருவாக சபை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1995ம் ஆண்டு சித்ரா பௌர்ணமி தேர்த்திருவிழாவில் ஸ்ரீ செல்வ விநாயகர் புதிய சித்திரத் தேரில் முதன் முதலாக எழுந்தருளி வெளிவீதி உலாவை நிறைவு செய்து மீண்டும் ஆலயத்தை வந்தடையும் காட்சி, பெரியவொரு திருப்பணி இனிதே நிறைவேறிய மகிழ்ச்சியில் நிருவாக சபையினரும் பக்தர்களும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சித்ரா பௌர்ணமி தேர்த்திருவிழா

வருடந்தோறும் சித்திரை மாதம் வருகின்ற சித்ரா பூரணைத்தினம் ஸ்ரீ செல்வ விநாயகர் தேரில் எழுந்தருளி வெளிவீதி உலா வரும் தினமாகும். 1952ம் ஆண்டு முதல் இத்தேர்த்திருவிழா உற்சவம் இடம்பெற்று வருகிறது. இப்போது சித்ரா பூரணைத்தினத்திற்கு பதினைந்து தினங்களுக்கு முன் கொடியேற்ற உற்சவம் இடம்பெறுகின்றது. கொடியேற்ற உற்சவதினம் காலை ஸ்தம்ப கொடி யானை மீது வைத்து இரத்தோட்டை நகர் வழியே கொடி ஊர்வலம் நடைபெறுகிறது யானை மீதான கொடி ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாகும்.



கொடியேற்ற உற்சவ தினம் முதல் தொடர்ந்து பதினைந்து தினங்கள் பகல், இரவு திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. திருவிழாவிலே பகல்வேளை 108 சங்காபிஷேகமும் மாலை சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் இரவு விஷேட வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று விநாயகர் உள்வீதி வலம் வருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர்த்திருவிழா பதினைந்தாவது தினம் இடம் பெறுகிறது. அன்று காலை சங்காபிஷேகத்துடன் பக்தர்கள் இரத்தோட்டை இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்திலிருந்து பாற்குடம் எடுத்து வருவார்கள். தொடர்ந்து பாலாபிஷேகம் இடம்பெற்று விஷேட மூலஸ்தான பூஜையும். மகேஸ்வர பூஜையும். அன்னதானமும் இடம்பெறும். தொடர்ந்து விநாயகப் பெருமான் வெளிவீதி உலா வரும் இரதோற்சவம் இடம்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர்திருவிழாவுக்கு மறுதினம் விநாயகர் சப்பரத்திலே கம்மடுவ வீதியில் உள்ள நதி தீரத்திற்கு தீர்தோற்சவத்திற்காக வெளி வீதி எழுந்தருளுவார். தொடர்ந்து இரவு கொடியிறக்கம் இடம்பெறும். மறு தினம் இரவு பூங்காவன உற்சவம் இடம் பெறும் ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானம் பூக்களாலும் கனிகளாலும் ஆழகிய சிறு மரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அழகிய வனமெனக் காட்சி தரும் வசந்த மண்டபத்திலே விநாயகப் பெருமான் திருவூஞ்சலிலே சாய்ந்த வண்ணம் எழுந்தருள் செய்யும் காட்சி மனதை நெகிழவைக்கும் அற்புதக் காட்சியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவனத் திருவிழாவிலே கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் தொடர்ந்து திருவூஞ்சற் பதிகமும் பாடப்படும். அதனையடுத்து விநாயகர் தண்டிகையில் உள்வீதி உலா வரும் காட்சி பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கும்.




பூங்காவனத்திற்கு மறுதினம் ஸ்ரீ வைரவர் பூஜை இடம் பெற்று சித்ரா பௌர்ணமி மகோற்சவம் நிறைவு பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக ஆலயத் திருப்பணி

கிரகங்களின் சஞ்சாரத்திற்கேற்ப கிரக மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றங்கள் மனிதர்களது ஜனன நேரத்திற்கமைய அவர்களது வாழ்கையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இவை நன்மையையும் தீமையையும் விளைவிக்கலாம். எந்த விளைவுகளையும் முறையான நவக்கிரக வாழிபாட்டின் மூலம் சீர் செய்து கொள்ள முடியும். அதனால்தான் முறையாக அமைந்த ஆலயங்கள் தோறும் நவக்கிரக ஆலயம் அமைக்கப்பட்டு பூஜைகள் இடம்பெற்று வருகின்றன.. இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் ஒரு நவக்கிரக ஆலயம் இல்லாமை அடியார்களுக்கு பெரும் குறையாக இருந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் 07-02-1994ல் நிருவாக சபையினர் நவக்கிரக ஆலயத்திற்கான திருப்பணியை ஆரம்பித்தார்கள். சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 05-02-1995ல் நவக்கிரக ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.



சிவஸ்ரீ பாலகுகேஸ்வர குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்ப சாஸ்திரி திரு. நா. கோபாலரத்தினம் இந்த நவக்கிரக ஆலயத்தை வடிவமைத்தார். பண்டாரவளை சிவஸ்ரீ பாலகுகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேக கிரிகைகளில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய உதவித் தூதுவர் கௌரவ. A. கருப்பையா அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.



செயலாளர் நன்றி தெரிவிக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து கலாசார மண்டபத் திருப்பணி

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் இரத்தோட்டை நகரின் மத்தியில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்திலே நகரிலும், கிராமப்பகுதியிலும் நகரைச் சுற்றியுள்ள பெருந்தோட்டப் பகுதிகளிலும் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு இருந்த ஒரு பெரிய குறை தமது குடும்பங்களில் ஏற்படுகின்ற சுபகாரியங்களையோ அல்லது கல்வி கலை, கலாசார நிகழ்ச்சிகளையோ பலருக்கும் அறிவித்து பலரது ஆதரவுடன் செய்யக்கூடிய ஒரு பொதுவான மண்டப வசதி இரத்தோட்டைப் பிரதேசத்தில் இல்லாததாகும். திருமணம் போன்ற சுப காரியங்களையும் கலாசார நிகழ்ச்சிகளையும் பெரியளவில் செய்வதென்றால் மாத்தளை நகருக்கே வரவேண்டிய நிலை காணப்பட்டது.



இந்து கலாசார மண்டபத் திருப்பணித் தொடர்பாக ஆலய நிருவாக சபையினர் மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் மற்றும் பிரமுகர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திய காட்சி.


இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆலய நிருவாக சபையினர் கலாசார மண்டபமொன்றை ஆலய வளவில் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தை முன்வைத்தனர். இத்தருணத்தில் மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் அவர்கள் உள்ளக கட்டமைப்பு அமைச்சின் நிதி மூலமாக மலையகத்தின் முக்கிய நகரங்களில் கலாசார மண்டபங்களை அமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்டிருந்தார். அதனடிப்படையில் எமது நிருவாக சபையினர் உள்ளக கட்டமைப்பு அமைச்சுடனும், இந்து கலாசார அமைச்சுடனும் தொடர்புகொண்டு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கென ஒரு கலாசார மண்டபத்தை அமைக்கும் திருப்பணியின் ஆரம்பகட்ட வேலைத் திட்டங்களுக்கு நிதி உதவியைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார மண்டபத்தின் அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் அவர்கள் விஷேட பூஜையில் கலந்துகொள்ளும் காட்சி.

கலாசார மண்டபத்தின் ஆரம்ப வேலைத்திட்டங்களுக்கு நிருவாக சபை 75,000/- ரூபாய் செலவு செய்தது. தோட்ட உள்ளக கட்டமைப்பு அமைச்சு 765,000/- ரூபாவையும் இந்து சலாசார அமைச்சு 500,000/- ரூபாவையும் ஆரம்ப கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக வழங்கியது.



கலாசார மண்டபத்தின் முதல் கட்ட வேலைகள் நடைபெற்றுவரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிதியை அடிப்படையாகக் கொண்டு கலாசார மண்டபத்தின் முதல் கட்ட வேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளது. அண்மையில் ஆலயத்திற்கு வருகைதந்த அமைச்சர் மாண்புமிகு ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் கட்டிட நிர்மாண வேலைகளை பார்வையிட்டார்.

இரண்டாம் கட்ட வேலையாக மேல் மாடி அமைக்கப்படவுள்ளது. அதற்கான நிதியுதவிகளையும் நிருவாக சபையினர் எதிர்ப்பார்த்து செயல்படுகின்றார்கள்.

தனியே சமயப்பணியுடன் நின்று விடாமல் சமூகப்பணிகளிலும் நிருவாக சபையினர் ஈடுபடவேண்டும் என்ற நோக்கிலேயே இந்த கலாசார மண்டபத் திருப்பணி வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. கலை, கலாசார நிகழ்வுகள் அறநெறிப்பாடசாலை, வாசிகசாலை, இலவச தொழில் பயிற்சி வகுப்புகள், கல்விக் கருத்தரங்குகள் போன்ற பல சமூகப்பணிகளை கலாசார மண்டபத்தின் மூலம் நிறைவேற்றலாம் என்ற எதிர்பார்ப்புடன் நிருவாக சபையினர் ஈடுப்பட்டு வருகின்றனர். எல்லாம் வல்ல செல்வ விநாயகரின் திருவருளால் இத்திருப்பணி இனிதே நிறைவு பெற அனைவரது ஒத்துழைப்பையும் மேலாக கருதுகின்றோம்.



மாண்புமிகு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் கலாசார மண்டப வேலைகளைப் பார்வையிட வருகை தரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜகோபுர திருப்பணி

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கு அமைய ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களிலே இராஜகோபுரம் அமைக்கப்பட்டு இந்து மதத்தின் வரலாற்றுச் சிறப்புக்களை எடுத்துரைக்கும் புராண, இதிகாச நிகழ்வுகளை சிற்பங்களாக அக்கோபுரத்திலே வடிவமைக்கும் பணி தொன்று தொட்டு இடம்பெற்று வருகின்ற அம்சமாகும். எமது முன்னோர்கள் ஊரின் மத்தியிலே ஆலயத்தை அமைத்து உயரமாக இராஜகோபுரத்தை நிறுவினார்கள். அப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் அன்றாடம் தமது வாழ்விலே இடம்பெறுகின்ற இன்ப துன்பங்களிலே இறைவனை இணைத்து அவன் திருவருளை எந்நேரமும் எங்கிருந்தும் பெறக்கூடிய வகையில் இராஜகோபுரங்கள் அமைந்தன.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் 78 வருட பழமை வாய்ந்தது எனினும் 1970ம் ஆண்டுவரை இந்த ஆலயம் மூல விநாயகருக்கான ஒரு சிறு கட்டிடத்தையும் மற்றுமொரு சிறு மண்டபத்தை மட்டுமே கொண்டிருந்தது. 1970ம் ஆண்டளவில் இன்று காணப்படுகின்ற மூலஸ்தானம் வசந்த மண்டபம், மகா மண்டபம் என்பன அமைக்கப்பட்டன. அதன் பிறகு நீண்டகாலமாக இரத்தோட்டை வாழ் இந்து மக்கள் ஆலயத்திற்கென இராஜகோபுரம் ஒன்றை அமைத்து ஆகம முறைப்படி அமைந்த ஆலயமாக முழுமைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார்கள். பெரியளவு நிதிச் செலவைக்கொண்ட திருப்பணி என்றபடியால் இராஜகோபுர திருப்பணி சற்று காலதாமதமாகியே ஆரம்பமானது.

இன்றைய நிருவாக சபையின் தலைவர் திரு. K. கருப்பையா அவர்களின் தலைமையிலான நிருவாகம் இரத்தோட்டை வாழ் இந்து மக்கள் மட்டுமன்றி இலங்கைத் திருநாட்டில் பரந்து வாழ்கின்ற சகல இன மக்களின் ஒத்துழைப்புடனும் இராஜகோபுர திருப்பணியை 28.05.1995ல் ஆரம்பித்தது. இடைக்காலத்தில் நிதிப் பிரச்சினை மற்றும் சிற்பாசாரிகளை வரவழைத்துக்கொள்வதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக இத்திருப்பணி சற்று தாமதமாகினாலும் இன்று சுமார் இருபது லட்சம் ரூபா செலவிலே மூன்று வாசல்கள் ஐந்து கலசத்துடன் மிகக் கம்பீரமாக ஆலய இராஜகோபுரம் காட்சியளிக்கிறது.

இந்திய பல்லவர் கால சிற்ப வேலைகளைக் கொண்டமைந்துள்ள இந்த இராஜகோபுர நிர்மாணம் இந்தியா திருவாரூர் சிற்பாசாரிகள் R. செல்வம், T. சம்பத், B. ராஜேந்திரன் குழுவினரின் சிற்பவேலைகளையும் அருட்கலைத்திலகம் அராலியூர் S.S. மகேஸ்வரன் குழுவினரின் சிற்பவேலைகள் மற்றும் வர்ணவேலைகளுடன் கண் கொள்ளாக் காட்சியாக அழகு தருகிறது.

இராஜகோபுர கும்பாபிஷேக கிரியைகள் ஆலய குரு ஆகம புஷணம் சிவஸ்ரீ ச. ஜெயந்தி நாதக் குருக்களின் அழைப்பின்பேரில் நீர்கொழும்பு சித்தி விநாயகர் ஆலய குரு ஆகமப் பிரவீண சிவாச்சாரியமணி வேதாகம ஞான ஜோதி கு. குகேஸ்வரக்குருக்கள் அவர்களது தலைமையிலான குருமார்களால் இன்றைய தினம் நடைபெறுகிறது. இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வரலாற்றில் இத்திருப்பணி முக்கிய சிறப்பம்சமாகும்.

இன்றைய தினம் இரத்தோட்டை வாழ் இந்து மக்களுக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தரும் திருநாள் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பொறுப்புக்களை மேற்கொண்டு வரும் அறங்காவலர்கள் அவற்றை பெருமைக்குரிய பதவிகளாகவும், புகழுக்குரிய பதவிகளாகவும் என்னாமல் அவற்றை ஆண்டவன் எமக்கு கொடுத்த சந்தர்ப்பமாகவும், பெரும் பாக்கியமாகவும் கருதி சைவமும், தமிழும், ஆலயமும் முன்னேற பாடுபட வேண்டும் என்பதே எனது அவா ஆகும்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று கூறுவார்கள். அந்த பெரும் பாக்கியம் இன்று இரத்தோட்டை வாழ் சைவப்பெருமக்களுக்கு கிடைத்திருக்கும் இந்நந்நாளிலே, எமது ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமானின் அருட்கடாட்சத்தால், இவ்வாலயம் ஆகம விதிகளுக்கமைந்த பெரும்தேவஸ்தானமாக வளர வேண்டும், இவ்வாலயத்தின் மூலமாக இங்கு வாழ் மக்களுக்கு பெரும் நன்மைகள் கிட்ட வேண்டும், இத்திருநாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலவி எல்லா இன மக்களும் சந்தோஷமாக வாழக்கூடிய நிலை உருவாக வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இக்கும்பாபிஷேகத்தை ஆகம விதிகளுக்கமைய நடாத்துகின்ற சிவாச்சாரியார்களுக்கும், ஆலய நிர்வாக சபை, திருப்பணிச்சபை அங்கத்தவர்களுக்கும், ஆலய பணியாட்களுக்கும், இக்கும்பாபிஷேக மலர் வெளியிட அரும்பாடுபட்ட இணைச்செயலாளர் சொ. மயில்வாகனத்திற்கும், இந்த மலரை சிறப்பாக வெளியிட உறுதுணையாக இருந்த கண்டி நந்தன் அச்சகத்தினருக்கும், எல்லாவகையிலும் உதவி செய்த அனைவருக்கும், ஸ்ரீ செல்வ விநாயகப்பெருமான் அருட்கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

கா. கருப்பையா
தலைவர்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
இரத்தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர

கும்பாபிஷேகம்

சிறப்பாக நடைபெற்று அடியார்களுக்கு விநாயகர்

அருள் பொழிக



வ த னி டி ரே ட ர்

இலக்கம் 25, பிரதான வீதி, இரத்தோட்டை

தொலைபேசி : 066-55220

**உரிமையாளர் : K.A. கந்தையா**

- சுத்தமான உணவுப்பொருட்களுக்கான மொத்த, சில்லறை வியாபாரிகள்
- பாடசாலை உபகரணங்கள், பூஜை பொருட்கள் அனைத்தும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

*Vathani Trader*
*No. 25, Main Street,*
*Rattota*

வீரகேசரி,
தினக்குரல்
தினமுரசு
இரத்தோட்டை
முகவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே
நடைபெற்று நாடு நலம்பெற அம்பாளின்
திருவருளை வேண்டுகின்றோம்


258, Main Street, Matale.
Telephone : 066-22599
Fax : 0094-66-30403



# சிவசக்தி கோர்ப்பரேஷன்

**Importers of Quality Vegetable Seeds**
**Wholesale & Retail Dealers in Agro Chemicals,**
**Fertilizers, Sprayers, "AGRO" and "CENTRIC"**
**Domestic Water Pumps**

# லக்ஷ்மி பொரேஜ்



**Sole Agent for PRIMA livestock feed &**
**Day Old Chicks**

No, 249, Main Street, Matale.

Tel : 066 - 30403 / 22599
Fax : 0094 - 66 - 30403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DESIGNED, TYPESET & PRINTED AT NANDHAN PRINTERS, KANDY. PHONE; 08 -223 694